1981 ஜனவரி 31]

காட்டி வருகிறோம். அப்படிப்பட்ட சூழ்நிலையில் அந்த நாடுகளிலிருக்கிற அந்த அமைப்புகளோடு நாம் போட்டிபோட்டுக் கொண்டு காரியங்கள் செய்ய முடியாத நிலையில் இருக்கிறோம். உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமானால், இராமேஸ்வரம் தீவை 28 கோடி ரூபாய் செலவிலே அற்புதமான இராமேஸ்வரம் தீவாக ஆக்க வேண்டுமென்ற திட்டம் மத்திய அரசுக்கு அனுப்பப் பட்டிருக்கிறது. இன்னும் அதற்கான அனுமதி கூட கிடைக்கவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, வெளிநாடுகளிலே தமிழகத்திலே உள்ள சுற்றுலா இடங்களைப் பற்றி விளம்பரங்கள் செய்யப்படுவதாக அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள் தமிழகத்தைப் பொறுத்தமட்டில் பேரறிஞர் அண்ணா அவர்கள் அடிக்கடி விரும்பித் தங்கிய இடமாகிய பிச்சாவரம் பகுதியையும் தரங்கம்பாடியையும் . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மூலக்கேள்வி வெளிநாடுகளிலே தமிழகத்தின் சுற்றுலா இடங்கள் பற்றி விளம்பரம் செய்வது பற்றியது.

திரு. இரா. கருப்பையா : தலைவர் அவர்களே, இந்தச் செய்தி விளம்பரத் துறை சுற்றுலா இடச் சிறப்புகள் பற்றி படக்காட்சிகளை எடுத்து வெளிநாடுகளிலே காட்டி விளம்பரம் செய்ய முன் வருமா?

மாண்மிகு திரு. ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுற்றுலாத் துறையின் சார்பிலே தயாரிக்கப் பட்டிருக்கிற செய்தி விளக்கப்படம் இந்திய சுற்றுலாத் துறையின் மூலமாக வெளிநாடுகளிலே திரையிடப்படுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெளிநாடுகளிலே தமிழகத்தைப்பற்றிச் செய்யப்படுகிற விளம்பரங்களிலே தமிழகத்திலே மதுவிலக்கு ரத்து செய்யப் பட்டிருக்கிறது என்றும் ஆகவே வெளிநாடுகளிலிருந்து தாராளமாக இங்கு வரலாம் என்றும் விளம்பரம் செய்யப்பட்டு இருக்கிறதா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது இந்தக் கேள்வியில் வராது.

பனமரத்துப்பட்டி ஏரி.

*வினா எண். 127—செல்வி பி. விசயலட்சுமி : மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா—

சேலம் மாவட்டம் பனமரத்துப்பட்டி ஏரியை ஆழப்படுத்தி மேம்பாடு செய்யவும் சுற்றுலாத் தலமாக மாற்றவும் செயற் குறிப்பு ஏதும் உள்ளதா?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தற்சமயம் இல்லை.

செல்வி பி. விசயலட்சுமி : தலைவர் அவர்களே, பனமரத்துப் பட்டி ஏரியை ஆழப்படுத்தி மேம்பாடு செய்யவும் சுற்றுலா தலமாக்கவும் ஆக்க வேண்டிய பணிகளை அரசு எப்போது பரிசீலனை செய்யும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட அளவிலே உள்ள சுற்றுலாத் தலங்கள், அதற்கான போக்குவரத்து பாதை வசதிகள், அங்கே இருக்கின்ற சிறப்புகள் இவைகளை அடிப்படையாக வைத்துத் தான் தேர்ந்தெடுக்கப்படுகின்றன. அந்த வகையிலே பனமரத்துப் பட்டி ஏரி இப்போது உடனடியாக அந்தப் பட்டியலிலே வருகிற சூழ்நிலை இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அங்கே இருக்கிற ஒரே சிறப்பு நான்தான்.

கூடலூர் பகுதியில் உள்ள மாவடியில் நிலப் பட்டாக்கள் வழங்கல்.

*வினா எண். 128 திரு வே. இரா. ஜெயராமன் : மாண்புமிகு செய்தி அறநிலைய அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா

மதுரை மாவட்டம் கூடலூர் பகுதியில் உள்ள ''மாவடி'' புல்மேடு பகுதியை ஏழை எளிய விவசாயிகளுக்கு பட்டா செய்து கொடுக்கும் எண்ணம் அரசுக்கு உள்ளதா?

மாண்புமிகு திரு ஆர். எம். வீரப்பன் : இல்லை.

திரு வே. இரா. ஜெயராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூடலூர் பகுதியிலே உள்ள மாவடி, புல்மேடு, வண்ணாத்திப்பாறையில் உள்ள ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங் களை அங்கே உள்ள பெரிய நிலச்சுவான்தார்கள் விவசாயம் செய் வதற்கு குத்தகைக்கு எடுத்துக் கொண்டார்கள். அந்தக் குத்தகை காலம் முடிந்தவுடன் அவற்றை எடுத்து ஏழை எளிய விவசாயி களுக்குக் கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு ஆர். எம். வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவடி, புல்மேடு போன்ற ஏலக்காய் பயிரிடும் நிலங்கள் குத்தகை சம்பந்தமாக அரசு ஏற்கெனவே ஒரு முடிவை எடுத்து அமல்படுத்த வேண்டுமென்று அறிவுறுத்தி யிருக்கிறது. அப்படி நீண்டகால குத்தகைக்கு விடப்பட்டு இருக்கிற அந்த நிலங்கள் குத்தகை காலம் முடிந்தவுடன் மீண்டும்